# சென்னை விமான நிலையத்தில் கழகத் தலைவருக்கு உற்சாக வரவேற்பு!




இலண்டன் சென்றிருந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (19.7.2026) இரவு சென்னை வந்தடைந்தார்கள். விமான நிலையத்தில் கழகத் தலைவர் அவர்களுக்கு ஏராளமான கழகத்தினர் உற்சாக வரவேற்பளித்த காட்சியை படத்தில் காணலாம்.

### கழக இளைஞர் அணியின்

## அடுத்த Innings -ஐ ஆரம்பிக்கலாமா?

### 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 21 -

கழக இளைஞர் அணி 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள வலைதளப் பதிவு வருமாறு:-

கழகம் நெருக்கடியில் இருந்த நேரத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான MISA_Batchஐ கொண்டு தொடங்கப்பட்ட நம் கழக இளைஞர் அணி, இன்றைக்கு 47ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கொள்கைப் பணிமக்கள் பணிகளைக் களத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாற்ப் போல் முன்னெடுக்கக் காத்திருக்கும் கழக இளைஞர் அணியின் அடுத்த Inningsஐ ஆரம்பிக்கலாமா..!

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



### இளைஞர்களின் எழுச்சியே

## திராவிட இயக்கத்தின் அசைக்க முடியாத வலிமை!

### முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வாழ்த்துச் செய்தி!

விருதுநகர், ஜூலை 21-

தி.மு.க. இளைஞர் அணி 47வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, தமது சமூக வலைதளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



46 ஆண்டுகளாகக் கொள்கையை உயிராகவும், சமூக நீதியை இலட்சியமாகவும், தமிழர் உரிமையை காப்பதை அடையாளமாகவும் கொண்டு எண்ணற்ற இளைஞர்களை உருவாக்கி, இன்று 47 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பெருமை மிகு இயக்கம் தி.மு.க. இளைஞரணி.

காலம் மாறினாலும், தலைமுறைகள் மாறினாலும், திராவிடச் சிந்தனையையும் மக்கள் பணியையும் முன்னெடுத்துச் செல்லும் உறுதியான சக்தியாகக் கழகத்தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, இளைஞரணியின் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இளைஞரணி திகழ்ந்து வருகிறது.

கழகத்தின் ஒவ்வொரு வெற்றிக்கும், ஒவ்வொரு மக்கள் போராட்டத்திற்கும், ஒவ்வொரு களப்பணிக்கும் பின்னால் தன்னலமின்றி உழைக்கும் இளைஞர்களின் வியர்வையும் அர்ப்பணிப்பும் நிறைந்திருக்கிறது என்றும் கழகக் கொள்கையை உயர்த்திப் பிடித்து வரும் தி.மு.க. இளைஞரணியின் ஒவ்வொரு உடன்பிறப்பிற்கும், இந்த இளைஞர் கூட்டத்தைச் சிறப்புற வழிநடத்தி வரும் எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

### பழனி நில விவகாரம்: அவதூறு பரப்பியதற்காக நிபந்தனையற்ற மன்னிப்பு -

## ரூ.10 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும்!

### விகடன் குழுமத்திற்கு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி நோட்டீஸ்!

சென்னை, ஜூலை 21 -

தன்மீது அவதூறு பரப்பும் நோக்கில் வீடியோ மற்றும் செய்தி வெளியிட்டுள்ள விகடன் குழுமத்தின் மீது நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியும் 10 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென நஷ்ட வழக்கு தொடர்ந்திட முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான அர.சக்கர பாணியின் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.



தி.மு.க. முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான அர.சக்கரபாணி அவர்கள் மீது அவதூறு பரப்பும் நோக்கில் வீடியோ மற்றும் செய்தி வெளியிட்டுள்ள விகடன் குழுமத்தின் மீது மான நஷ்ட வழக்கு தொடுப்பது தொடர்பாக 19.07.26 அன்று அர.சக்கரபாணி சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்குச் சொந்தமான, சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள 1.35 ஏக்கர் நிலத்தை ஒரு தனியார் அறக்கட்டளை தங்களுக்கு சொந்தமானது என்று கூறி, கடந்த மார்ச் 2026ல் டி. சேதுபதி மற்றும் கே. வெள்ளத்துரை ஆகிய இரு நபர்களுக்கு வெறும் 2 கோடி ரூபாய்க்கு முறைகேடாக பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளது.

இந்த நிலப் பதிவு தொடர்பாக அண்மையில் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பின்படி, அந்த முறைகேடான விற்பனைப் பத்திரம் ரத்து செய்யப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான திமுக இந்த விவகாரத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி முறையான விசாரணையை வலியுறுத்தி உள்ளது.

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பரந்தாமன் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பழனி கோவில் நில மோசடி விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், இந்த விவகாரத்தில்உண்மைகுற்றவாளிகளையும், உயர் அதிகாரிகளையும் காப்பாற்றும் நோக்கோடும், பொதுமக்களின்கவனத்தைத்திசைதிருப்பும் வகையிலும் விகடன் டிவியின் யூடியூப் பக்கத்தில் கடந்த ஜூலை 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் முன்னாள் அமைச்சர் சக்கரபாணியை தொடர்புபடுத்தி அவதூறு வீடியோக்கள் வெளியிடப்பட்டன.

மேலும், ஜூனியர் விகடன் இதழில் (தேதி: 22.07.2026) ‘பழனி நில சர்ச்சை… சக்கரபாணிக்கு சிக்கல்’ என்ற தலைப்பில் முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி யின் புகைப்படத்துடன் அவதூறான கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில்,

நிலத்தை வாங்கியவர்களோடு அர. சக்கரபாணி அவர்களை தொடர்பு படுத்தி எவ்வித ஆதாரமுமின்றி அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. நிலத்தை வாங்கியதாகக் கூறப்படும் வெள்ளத்துரை மற்றும் சேதுபதி ஆகிய நபர்கள் யார் என்று கூட தெரியாது என முன்னாள் அமைச்சர்அர. சக்கரபாணி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இந்த விவகாரத்தில் விகடன் செய்தியாளர் தொடர்பு கொண்டு கேட்டபோதே இக்குற்றச்சாட்டுகளை அவர் மறுத்திருந்தார். இருப்பினும், அடிப்படை ஊடக அறத்தை மீறி, அவரது மறுப்பை பிரசுரிக்காமல் திட்ட மிட்ட உள் நோக்கத்துடன் இந்த அவதூறு பரப்பப்பட்டுள்ளது.

ஆகவே விகடன் குழுமமானது யூடியூப் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரு அவதூறு வீடியோக்களையும் உடனடியாக நீக்க வேண்டும். ஜூனியர் விகடன் இதழின் பிரசுரிக்கப்பட்ட அவதூறு கட்டுரையைத் திரும்பப் பெற வேண்டும் மற்றும் விற்கப்படாத இதழ்களை உடனடியாக அழிக்க வேண்டும்.

அடுத்த ஜூனியர் விகடன் இதழின் அட்டைப் பக்கத்திலும், இணையதளத்திலும் முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணியிடம் நிபந்தனையற்ற பகிரங்க மன்னிப்பு கோரி செய்தி வெளியிட வேண்டும். அவரது நற்பெயருக்குக் களங்கம் விளை வித்ததற்காக ரூ. 10 கோடி (பத்து கோடி ரூபாய்) இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும், இந்த வழக்கறிஞர் நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் இக்கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினால், விகடன் குழுமத்தின் மீதும், சம்பந்தப்பட்ட செய்தியாளர்கள் மீதும் உரிய சிவில் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## GEN Z - இளைஞர்கள் - மாணவ - மாணவிகள் கலந்துரையாடல்!

### 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

தென்காசி, ஜூலை 21 -

தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி சிவந்தி நகர் கோல்டன் மஹாலில் GEN Z தி.மு.க. சார்பில் இளைஞர்கள், இளம் பெண்கள் மற்றும் மாணவர், மாணவியர்கள் கலந்துரையாடல் நிகழ்வு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் அறிவுறுத்தலின்படி நடைபெற்றது.

இந்நிகழ்வில் GEN Z தி.மு.க. தலைமையிலிருந்து இளம் பேச்சாளர்களான யாசர் அரபாத், ஹேமநாதன், ராஜேஸ்வரி, சையது முஷ்ரப், கு.விஜய்குமார் மற்றும் சுபத்ரா ஆகியோர் கலந்து கொண்டு, இன்றைய இளைஞர்களின் பங்கு, சமூக வலைதளத்தின் பொறுப்பான பயன்பாடு, அரசியல் விழிப்புணர்வு, சமூக நீதி, திராவிட சிந்தனை மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி இளைஞர்களுடன் கலந்துரையாடினர்.

நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா, மாணவரணி துணை அமைப்பாளர்கள் இ.எட்வின் தர்மராஜ் மற்றும் எஸ்.கதிர் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

தென்காசி தெற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது கருத்துகள், கேள்விகள் மற்றும் ஆலோசனைகளை பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி இளைஞர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன்,

திராவிட இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் சமகால அரசியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயனுள்ள கலந்துரையாடலாக அமைந்துள்ளது.



விளாத்திகுளம் மத்திய ஒன்றிய கழக நிர்வாகி,புஷ்பராஜ் டிராக்டர்ஸ் உரிமையாளர் முத்துசற்குணம் இல்ல காதணி விழாவில் முன்னாள் அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன், சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி கலந்து கொண்டு வாழ்த்தினர் . நிகழ்வில் மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.